## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TITTAGUDI.

**CC. No. 77/2016 L.W.1 P.W.1**

| | |
|---|---|
| Name | : முருகானந்தம் |
| Father/Husband Name | : கந்தசாமி |
| Age | : 38 |
| Village | : குன்னம் |
| Taluk | : குன்னம் |
| District | : பெரம்பலூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **06.09.2022**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் குன்னத்தில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். விபத்தில் இறந்த கந்தசாமி என்பவர் எனது தந்தை. எனது தந்தை இறப்பதற்கு முன்னர் சைக்கிளில் வைத்து காய்கறிகள், பழங்கள், பட்டாணி போன்றவைகள் வியாபாரம் செய்துவந்தார்.

2. கடந்த 2016–ம் ஆண்டு ஒருநாள் தேதி, மாதம் நினைவில்லை. எனது தந்தை சைக்கிளில் வியாபாரம் செய்வதற்காக புறப்பட்டு சென்றார், அவர் சென்ற இரண்டு நாட்கள் கழித்து விருத்தாசலம் சாலையிலுள்ள EB அலுவலகம் அருகே கடலூர் நோக்கி சென்றுக்கொண்டிருந்தபொழுது அவருக்கு பின்னால் அதே திசையில் வந்த ஸ்டார் சிட்டி (பதிவெண் தற்பொழுது ஞாபகமில்லை) என்ற இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த அதன் ஓட்டுனர் வேகமாக ஓட்டி வந்து எனது அப்பாவின் மீது மோதினார் என்றும், அதில் எங்க அப்பாவின் பின்னந் தலையிலும், வலது தோள்பட்டையிலும் பலத்த காயம் அடிபட்டது என்றும், அங்கிருந்தவர்கள் 108 ஆம்புலன்ஸ் வரவழைத்து அதில் என் அப்பாவை திட்டக்குடி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார்கள் என்றும், பின்னர் பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு மேற்சிகிச்சைக்காக அழைத்துச் சென்றதாகவும் திட்டக்குடியிலிருந்து ஒருவர் எனக்கு கைப்பேசி தகவல் தெரிவித்தார் மேற்படி தகவல் சொன்ன நபர் யார் என்று தற்பொழுது எனக்கு ஞாபகமில்லை. மேற்படி தகவல் கிடைத்தவுடன் நான் உடனே பெரம்பலூருக்கு மறுநாள் காலை 7.30 மணியளவில்

சென்று அங்கிருந்த எனது அப்பாவை பார்த்தேன் என் அப்பாவை விசாரித்தபோது அவர் கீழே விழுந்துவிட்டதாக தெரிவித்தார். ( சாட்சி மீண்டும் எனது அப்பா என்னிடம் பைக் மோதி கீழே விழுந்துவிட்டதாக மாற்றி சாட்சியமளிக்கிறார்). பின்னர் அன்றையதினம் மதியம் 12.00 மணியளவில் பெரம்பலூர் அரசு மருத்துவமனையிலிருந்து மருத்துவமனை மூலமாகவே 108 ஆம்புலன்ஸ் மூலம் திருச்சி அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள் நான் என் அப்பாவுடன் ஆம்புலன்சில் சென்றேன். மேற்படி திருச்சி அரசு மருத்துவமனையில் எனது அப்பா மூன்று நாட்கள் சிகிச்சையிலிருந்து மூன்றாவது நாள் அன்று இறந்துவிட்டார்.

3. அப்பொழுது நான் உடனில்லை. எனது அம்மாதான் இருந்தார். தற்பொழுது நீதிமன்றத்தில் காட்டப்படும் ஆவணமான புகாரிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். இப்புகாரினை எனது மாமாதான் எழுதினார். புகாரிலுள்ள விபரம் எனக்குத் தெரியாது. கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.1** போலிசார் என்னை விசாரித்தார்.

**பகுதி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு நீதிமன்ற அனுமதியின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

புகாரினை எனது மாமா எழுதியிருந்தாலும் அதிலுள்ள விபரங்களை தெரிந்துகொண்டுதான் கையொப்பம் இட்டேன் என்றால் சரியல்ல. நான் காவல் நிலையத்தில் வெளியே நின்றுக்கொண்டிருந்தேன். எனது மாமா புகார்அளித்தார். புகாரிலுள்ள விபரங்களை தெரிந்துக்கொண்ட பிறகுதான் நான் கையொப்பம் செய்தேன் என்றும், புகாரிலுள்ள விபரங்கள் எனக்குத் தெரியும் என்று சொன்னால் சரியல்ல. புகார் மனு அளித்துவிட்டு தற்பொழுது எதிரியை இவ்வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி ஆஜரில்லை. வழக்கறிஞர் ஆஜர் குறுக்கு விசாரணை**

1. விபத்து நடந்த காலக்கட்டங்கள் மழை காலம் என்றால் சரிதான். சம்பவத்தின்பொழுது எனது அப்பாவிற்கு 58 வயது. எனது அப்பா அடிப்பட்டுவிட்டதாக யார் எனக்கு தகவல் கொடுத்தார் என்றால் இரும்பு கடையிலிருந்து தகவல் கிடைத்தது. ஆனால் யார் தகவல்கொடுத்தது என்று

எனக்கு நினைவில்லை. சம்பவத்தின்பொழுது எனது திட்டக்குடியிலுள்ள இரும்பு கடைக்கு பழைய இரும்பு சாமான்களை விலைக்கு போடுவதற்காக சென்றார். எனது அப்பா இரும்பு கடைக்கு சென்ற விபரத்தை எனக்கு யார் சொன்னார் என்று நினைவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. முதல் தகவல் அறிக்கையை எனக்கு போலிசார் அளிக்கவில்லை. முதல் தகவல் அறிக்கையில் கையொப்பம் இட்டேனா என்று எனக்கு நினைவில்லை.

**2.** எனது அப்பா திடீரென்று சாலையின் குறுக்கே சென்றதால்தான் விபத்து நடைபெற்றது என்று சொன்னால் நான் விபத்தை நேரில் பார்க்காததால் இதைப்பற்றி எனக்குத் தெரியவில்லை. எனது அப்பா பகல் முழுக்க சைக்கிளில் வியாபாரம் செய்வதால் உடல் சோர்வின் காரணமாக சாலையை கடக்கும்பொழுது விபத்து நடைபெற்றது என்று சொன்னால் சரியல்ல.